## பத்தாங் பெனார் ரூமா மூரா குடியிருப்பில் மண் சரிவு: 6 வீடுகள் சேதம்

(துர்க்கா)



நீலாய், ஆக. 31-

பலத்த அடைமழை பெய்து வருவதை தொடர்ந்து பத்தாங் பெனார் ரூமா மூரா குடியிருப்பில் மண் சரிவு ஏற்பட்டதில் 6 வீடுகள் பலத்த சேதத்துக்குள்ளாயின.

நேற்று முன்தினம் இரவு நீலாய், பத்தாங் பெனார் ரூமா மூரா குடியிருப்பில் இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.



தகவல் கிடைத்ததும் குடியிருப்புக்கு விரைந்து வந்த மாநில ஆட்சிக் குழு உறுப்பினரும், நீலாய் சட்டமன்ற உறுப்பினருமான ஜ.அருள்குமார் பாதிக்கப்பட்ட குடியிருப்பு வாசிகளுக்கு ஆறுதல் கூறியதுடன், மாநில அரசாங்கம் நடவடிக்கை எடுக்க உதவும் என்று அவர் குறிப்பிட்டார்.

குடியிருப்பில் மண் அரிப்பு மிகவும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதால் உடனடியாக அதனை சரி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் விளக்கினார்.

இதனைத் தொடர்ந்து, மண் சரிவு ஏற்பட்டுள்ள பகுதியை சிரம்பான் மாநகராட்சி தலைவர் மேயர் டத்தோ மஸ்ரி ஹாஜி ரசாலி, நீர்ப்பாசன மற்றும் வடிகால் அதிகாரிகளும் வீட்டு வசதி துறை அதிகாரிகளும் வந்து பிரச்சினைக்கான காரணத்தை கண்டறிந்திருப்பதாக மேலும் கூறப்பட்டது.

## வெள்ளம் ஏற்படுவதைத் தவிர்க்க துரோலாக் ஆற்றில் மரக்கட்டைகளை அகற்றுவது எப்போது?

(எஸ்.எஸ்.பரதன்)



துரோலாக், ஆக. 31-

அடைமழை பெய்யும் காலங்களில் துரோலாக் பகுதிகளில் அடிக்கடி வெள்ளம் ஏற்படுவதால் தாழ்வான பகுதிகளில் வசித்து வருபவர்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள்.

வெள்ளப் பெருக்கு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு மாவட்ட இலாகாவும், மாவட்ட மன்றமும் பல நடவடிக்கைகள் மேற்கொண்ட போதிலும் துரோலாக் ஆற்றுப் பாலத்திற்கடியில் மரக்கட்டைகள் அடைத்துக் கிடப்பதால் நீர் மட்டம் நிலப் பகுதிகளுக்குச் செல்வதாக முவாலிம் மாவட்ட இந்திய சமூகநல அமைப்பின் தலைவர் சுகுமாரன் தெரிவித்தார்.

மழை பெய்யும் காலங்களில் மலைப் பகுதியிலிருந்து அடித்து வரப்படும் மரக்கட்டைகள், பாலத்தின் அடியில் சிக்கிக் கிடப்பதால் நீரோட்டம் தடைபடுவதாகக் கூறினார். இக்கால கட்டத்தில் அடைமழை பெய்தால், வெள்ளம் குடியிருப்புப் பகுதிகளில் பெருக்கெடுத்து ஓடுவதற்கு வாய்ப்பிருப்பதாகக் கூறுகிறார்.

ஒரு வாரத்திற்கும் மேலாக அப்பாலத்திற்கடியில் மரக்கட்டைகள் அடைபட்டுக் கிடந்தபோதிலும், சம்பந்தப்பட்ட நீர்ப்பாசன இலாகாவோ அல்லது மாவட்ட மன்றமோ எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது வருத்தமளிப்பதாகக் கூறினார்.

மீண்டும் வெள்ளம் வருவதற்கு முன் அலட்சியமாக இருந்து விட்டு வெள்ளம் வந்தபின் நடவடிக்கைகள் மேற்கொள்வதில் எந்தவொரு பயனும் கிடையாது என நினைவுறுத்தினார். மேலும் வெள்ளப் பேரிடர் ஏற்படுவதைத் தடுக்க சம்பந்தப்பட்ட இலாகாக்கள் உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார்.




AG10966/31/08/22

மனதார வாழ்த்துகிறோம்



நம்பிக்கையின் வெற்றி
இரை எங்கு இருந்தாலென்ன
இறக்கையாய் உந்துசக்தி உன்னோடு இருக்கையில்!
இலக்கு தொலைவில் இருந்தாலென்ன
ஈட்டியாய் பாயும் உன் நம்பிக்கை இருக்கையில்!

போராட்டம் எத்தனை வந்தாலென்ன,
எரிமலையாய் துணிவு இருக்கையில்!
சவால்கள் எத்தனை வந்தாலென்ன,
சாதிக்க நீ வெறியுடன் துடிக்கையில்!

பயணம் எத்தனை தூரம் இருப்பின் என்ன,
சூறாவளியாய் உன் வேகம் இருக்கையில்!
பிரச்சினைகள் எத்தனை இருப்பின் என்ன,
சுட்டெரிக்கும் விவேகம் உன் வசம் இருக்கையில்!

சோகம் பல சூழ்ந்து வந்தாலென்ன
அக்கினி பிழம்பாய் உன் சக்தி இருக்கையில்!
சோர்வடையச் செய்யும் சூழ்நிலைகள் வந்தாலென்ன
சுறுசுறுப்புடன் கூடிய உன் விடாமுயற்சி இருக்கையில்!

முட்டுக்கட்டை எத்தனை இருந்தாலென்ன –
அவைகளை மூட்டைக்கட்டும் கடின உழைப்பு
உன்னிடம் இருக்கையில்!
முறுக்கேற்றி பல எதிர்ப்புகள் வந்தாலென்ன
வெற்றி பெறும் பேராற்றல் உன்னிடம் இருக்கையில்!

ஆயிரம் கைகள் மறைத்தால்லென்ன
ஆதவனை மறைக்க முடியுமா ?
ஆயிரம் செம்மறிகள் சேரினும்,
சிங்கத்தை எதிர்க்க இயலுமா?

மனதார வாழ்த்துவோர் :-



நண்பா, நீ சிங்கம், ஆதலால்
கர்ஜித்து, வீறுகொண்டு எழுந்து வா...
மலாக்கா மாநில ஆளுநரின் 73 வது பிறந்த நாளை முன்னிட்டு
மஇகா மத்திய செயலவை உறுப்பினரும் பாகோ
தொகுதி மஇகா தலைவருமான எங்கள் அன்புக்குரிய

டத்தோ சிவா கணேசன்

அவர்களுக்கு DARJAH PANGKUAN SERI
MELAKA (DPSM) எனும் டத்தோ விருது வழங்கி
சிறப்பிக்கப்பட்டதை முன்னிட்டு டத்தோ சிவா கணேசன் அவர்களையும்
அவரின் துணைவியார் டத்தின் தேவகி சிவா
அவர்களையும் மனம் குளிர்ந்து வாழ்த்துகிறோம்

APM

AGENCY PEKERJAAN MITHIRAN SDN.BHD. (757700-W) JTK SM 702C
SUITE 827, LEVEL 8, BLOCK A3, LEISURE COMMERCE SQUARE,
JALAN PJS 8/9, 46150 PETALING JAYA SELANGOR
EMAIL :apm@apmithiran.com.my / mithiran-72@hotmail.com
TEL : 03-78772417 / FAX : 03-78773417
FB : AP MITHIRAN,
WEBSITE :www.apmithran.com.my

RP00612/31/08/22